10th September 1960]

MR. SPEAKER: இன்று, கடைசிநாள். இன்னும் 14 கேள்விகள் இருக்கின்றன. அவைகளை, இன்னும் கூடுதல் 15 நிமிடங்கள் உட்கார்ந்து முடித்து விடலாம்.

SRI R. SRINIVASA IYER: Sir, we can extend the Question-Hour by half an hour instead of 15 minutes as there is very little business to transact to-day.

MR. SPEAKER: Suppose questions are finished within fifteen minutes. So, I will extend it in the first instance by 15 minutes. If questions are not finished within that time, then I will extend the time further.

Headquarters Hospital (Paramakudi)

*609 *Q.*—SRI V. SUBBIAH (on behalf of SRI K. RAMACHANDRAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state the present stage of the construction of the Headquarters Hospital at Paramakudi in Ramanathapuram district?

THE HON. SRI M. A. MANICKAVELU: Proposals for the acquisition of the lands required for the construction of the new buildings for the hospital have been called for from the Collector of Ramanathapuram.

SRI V. SUBBIAH: இம்மாதிரி ஒவ்வொரு தலைமை ஆஸ்பத்திரிக்கும் புது இடத்திற்கு எஸ்டிமேட் தயாரித்து வேண்டிய கட்டிடங்கள் ஆரம்பிக்காமல் இருக்கிறது. அவை எப்பொழுது ஆரம்பிக்கப்படும்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இது பரமக்குடி ஆஸ்பத்திரியைப் பற்றிய கேள்வி. இதில் சிறிது தாமதமான தற்குக் காரணம் அங்கு ஜாகை விஷயத்தில் எலெக்ட்ரிஸிட்டி கம்பெனிக்கும், போர்ட்டிற்கும் தகராறு இருந்தது. கடைசியில் அந்த தகராறு இடம் வேண்டாம், வேறு இடத்தில் கட்டலாம் என்று ஏற்பாடாகி இருக்கிறது.

SRI N. R. THIAGARAJAN: ராஜ்யத்திலுள்ள எல்லா தலைமை ஆஸ்பத்திரிகளையும் மாற்றியமைப்பதாக கேள்விப் பட்டேன். பரமக்குடியில் இன்னும் வேலை நடைபெறவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் தொகுதியாகிய சாத்தூரில்கூட அங்குள்ள தலைமை ஆஸ்பத்திரி பழைய காட்சியே அளிக்கிறது. ஆகவே எல்லாத் தலைமை ஆஸ்பத்திரிகளையும் மாற்றியமைத்து நல்ல கட்டிடங்களில் வைக்க முயற்சி எடுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இருக்கிற காட்சியை வேறு விதமாக மாற்ற வேண்டும், அதற்கு கொஞ்ச காலம் வேண்டும். தாலுகா தலைமை ஆஸ்பத்திரிகளை, ஏறக்குறைய ஜில்லா தலைநகர ஆஸ்பத்திரியில் எந்தளவு வசதி வேண்டுமோ அப்படிச் செய்ய திட்டம் போட்டு செய்துகொண்டு வருகிறோம். இதையெல்லாம் செய்து முடிக்க கொஞ்ச காலம் ஆகும். சில இடங்களில் இருக்கிற இடத்திலிருந்து மாற்றி வேறு

[10th September 1960

இடத்திற்குக் கொண்டுபோகவேண்டியிருக்கிறது. இட சௌகரியம் இல்லாததால் கொஞ்சகொஞ்சமாக, "பெஸ்ட் ப்ரோக்ராமா" கத்தான் செய்யமுடியும்.

Cauvery waters

* 610 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) காவிரியில் தண்ணீர் தட்டு ஏற்பட்டதற்கு மைசூர் அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் நிகழ்ந்த மாறுதல் காரணமா?

(ஆ) கண்ணம்பாடி அணையில் எத்தனை அடிக்கு மேல் தண்ணீர் இருந்தால் அது சென்னை மாநிலத்திற்குக் கிடைக்கும்?

(இ) இப்படி தண்ணீர் தட்டு காவிரியில் ஏற்படும் சமயத்தில் மைசூரிலிருந்து உதவிபெற்று பின் அதை ஈடு செய்ய ஏதேனும் மார்க்கமுண்டா? அப்படியானல் அதன் விவர மென்ன?

THE HON. SRI P. KAKKAN: (*a*) No, Sir. There has been no change or revision in the Madras-Mysore Agreement on Cauvery waters.

(*b*) The question of level in Krishna Raja Sagar has no connection with our rights. The flows due to us are being sent every day.

(*c*) Generally when we have difficulties due to a poor monsoon, Mysore may not also be better off. So there will be no chances of borrowing irrigation supplies from Mysore and returning it afterwards.

SRI A. VEDARATHNAM: இந்த சபையிலேயே இதற்கு முன் பல அங்கத்தினர்களால், காவேரிக்கு வருகிற தண்ணீரை அதன் உபநதிகளை மைசூர் அரசாங்கம் கட்டுப்படுத்தி அந்தத் தண்ணீரை அவர்கள் பயன்படுத்திக்கொள்வதாக . . .

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் அவர்கள் ஒன்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு வாரத்திற்கு முன் கனம் நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இதர மாகாணங்களைப் பற்றி நாம் பேசும்போது கொஞ்சம் ஜாக்கிரதையாக பேசவேண்டுமென்று. கனம் அங்கத்தினர் அவர்கள் இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்வார்கள் என நினைக்கிறேன். அதனால்தான் ஸ்ரீனிவாஸ ஐயர் அவர்கள் கொடுத்த கேள்விக்குக்கூட அனுமதி கொடுக்கவில்லை. இது சில நாட்களுக்கு முன் கொடுத்த கேள்வி. ஆகவே, உப கேள்வி கேட்கும்போது அதை அனுசரித்து கேட்கவேண்டும். மைசூர் அரசாங்கத்தைப் பற்றி இழிவாகப் பேசினல் அந்தக் கேள்விக்கு சம்மதம் கிடைக்காது.